# வேட்டுவக்கவுண்டர் சமூகநலச் சங்கம்

**ல.கள்ளிப்பட்டி, கோபிசெட்டிபாளையம்-638 452**
**ஈரோடு மாவட்டம்**


| M.ராஜப்பன் | K.M.கருப்பணசாமி | K.M.காளியண்ணன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| (செல் : 94893 72067) | (செல் : 94428 19188) | (செல் : 80126 76003) |


நாள்: 24.02.2011

பெறுநர்

மாண்புமிகு. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்,
தலைவர்,
திராவிட முன்னேற்றக் கழகம்,
சென்னை.

உயர்திரு.ஐயா,

மாண்புமிகு.கலைஞர் அவர்களது பொற்கால ஆட்சியில் தமிழகம் புதுப்பொலிவுடனும், வலிவுடனும் திகழ்கிறது. சிறப்பான பல சமூக நோக்குத் திட்டங்களால் தமிழ்மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள். சமூகநலத் திட்டங்களும், நல்லாட்சியும் தொடர மாண்புமிகு டாக்டர். கலைஞர் அவர்கள் 6-வது முறையாகவும் முதல்வர் பதவியேற்பார் என்பதில் நாங்கள் மிக மிக மகிழ்ச்சியடைகிறோம்.

எங்களது வேட்டுவக்கவுண்டர் சமுதாயம் தமிழ்நாடு முழுவதும் சில மாவட்டங்களில் பெரும்பான்மைச் சமுதாயமாகவும் , சில மாவட்டங்களில் சிறுபான்மையாகவும் வாழ்கிறார்கள்.

எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் விவசாயக்கூலிகளாக உள்ளனர். சொல்லக் கூடிய அளவில் தொழில் அதிபர்களாகவோ நில உடைமையாளர்களாகவோ இல்லை. சமூக பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்புகளில் மிகவும் பின் தங்கியவர்களாக உள்ளனர். அரசியல் அந்தஸ்தில் கூட பெரிய அளவில் பொறுப்புகளில் யாரும் இல்லை. மற்ற சமுதாயத்தைப் போல MP, MLA, என்று சொல்லும் அளவில் இல்லை. மத்திய, மாநில அமைச்சர்கள் போன்ற பதவிகளில் எங்கள் இனத்தவர்கள் இன்று வரை ஒருவர் கூட இருந்ததில்லை.

மாண்புமிகு. தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்கள், எங்கள் சமதாய மக்களுக்காக பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியிலும், முன்பு திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியிலும், தற்போது ஈரோடு மாநகராட்சி மேயராகவும் வாய்ப்புக்கள் கொடுத்ததை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்து நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் சமுதாயத்தின் பிரதிநிதியாக முன்பு (அமரர்) திரு.O.S.D. அவர்கள் மேலவை நியமன உறுப்பினராக இருந்தார். மேற்கண்ட அந்த வாய்ப்புகளை எங்கள் சமுதாயத்திற்கு மீண்டும் வழங்குவீர்கள் என நம்புகிறோம்.

மாண்புமிகு தமிழகத் துணை முதல்வர் அவர்கள் 14.11.2010 அன்று கோபிக்கு வந்திருந்த போது அவரிடம் நாங்கள் எங்கள் சமுதாயத்திற்கு சட்டப்பேரவை வேட்பாளர் வாய்ப்புக் வழங்க வேண்டிப் பணிவான விண்ணப்பம் கொடுத்தோம்.

குறிப்பாக, மறு சீரமைப்பில் கோபி சட்டமன்றத் தொகுதியுடன் பவானிசாகர் தொகுதியிலிருந்து சில கிராமங்கள் இணைக்கப்பட்டதினால் கோபி தொகுதியில் எங்கள் சமுதாயம் பெரும்பான்மை சமுதாயமாக உள்ளது.

எங்கள் சமுதாய மக்கள் கோபி தொகுதியில் எத்தனை பேர் உள்ளனர் என்பதைத் தெரிய, கோபி தொகுதியில் உள்ள எல்லா ஊர்களிலும் உள்ள எங்கள் சமுதாய இளைஞர்களிடம் படிவங்களைக் கொடுத்து கணக்கெடுப்பு நடத்தினோம். அதன்படி கோபி தொகுதியில் மட்டும் கணக்கெடுத்த வரை 45687 வாக்காளர்கள் உள்ளனர். அதாவது கோபித் தொகுதி மொதத வாக்காளர்களில் எங்கள் சமுதாயத்தினர் 25 சதவீதத்திற்கு அதிகமாக வாக்காளர்களாக உள்ளனர்.

எங்கள் சமுதாய மக்கள், அரசியல் வளர்ச்சிக்காக எங்கள் சமுதாய வேட்பாளருக்கு கட்சி வேறுபாடு இல்லாமல் இன ஒற்றுமையுடன் வாக்களித்து வெற்றி பெறச் செய்வார்கள். அதற்கு பவானிசாகர் தொகுதியில் எங்கள் இன வேட்பாளர்கள் தொடர்ந்து வெற்றி பெற்றதை உதாரணமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பவானிசாகர் தொகுதி தனித் தொகுதியாக அறிவிக்கப்பட்ட நிலையில், மாண்புமிகு தலைவர் டாக்டர். கலைஞர் அவர்கள், எங்கள் சமுதாயத்தின் மீது கருணை கொண்டு எங்கள் சமுதாய மக்களுக்கு அரசியல் வாய்ப்பளிக்கும் பொருட்டு எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை கோபி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராகத் தேர்வு செய்து அறிவிக்குமாறு பணிவுடனும், அன்புடனும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

கோபி தொகுதியில் எங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் வேட்பாளராக அறிவிக்கப் பட்டால் வெற்றி பெறுவது உறுதி என்பதையும், வெற்றிக்காக நாங்கள் அயராது உழைத்து வெற்றிக் கனியை தலைவர் டாக்டர். கலைஞர் அவர்களுக்கு அர்ப்பணிப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

பொருளாளர் செயலாளர் தலைவர்